# "உள்ளூர் உற்பத்தியை ஊக்குவிப்போம்"

## நம்மூர் செருப்பு

நாம் எங்கு சென்றாலும் நம்முடனே ஒட்டிக்கொண்டு எமக்காகத் தேய்கின்ற அணியே **பாதணி.** செருப்புக்கள் இன்றி வெளியில் செல்லாத நாம் அதன் முக்கியத்துவத்தை உணர்வதுமில்லை. அதைப்பற்றி சிந்திப்பதுமில்லை. நில்லாத நல்லதோர் கால ஓட்டப்பயணத்தில் நீரிலும் நிலத்திலும் தனக்கென்று இல்லாது எமக்காய் தேய்வடைந்து நலம்மிக்க பாதைச்சூழலை உருவாக்கித்தரும் செருப்பு சில சமயங்களில் தகராறுகளின்போது அவமானச் சின்னமாக பயன்படுத்தப்படுகின்றது. நம் அனைவருக்கும் செருப்பினுடைய முக்கியத்துவம் தெரிந்தும் நாம் அதைப்பற்றி சிந்திப்பதில்லை. அதை ஒரு அமங்கலப் பொருளாகவே பார்க்கின்றோம்.

நாம் இழிவுபடுத்தும் ஆனால் நமக்கு மதிப்பைத்தரும் செருப்புக்களைத் தயாரிக்கும் தொழில் நிறுவனங்களை பெரிய நகரங்களில் கண்டிருப்போம். ஆனால் வடமராச்சியிலே உள்ள கிராமமான வதிரியிலே செருப்பு உற்பத்தி செய்யும் சிறிய தொழில் நிறுவனமான வதிரி தோற்பொருள் அபிருவித்தி கூட்டுறவுச்சங்கம் இருப்பதை நாம் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

இக்கிராமத்திலே 1987 இற்கு முற்பட்ட காலத்திலே குடிசைக்கைத் தொழிலாக பெருந்தொகையான மக்கள் தோற்செருப்புக்கள் உற்பத்தி செய்யும் தொழிலில் ஈடுபட்டிருந்தனர். இலங்கையின் வடக்கிலிருந்து தெற்கு வரை தமது உற்பத்திகளை புகையிரதம் மூலம் கொண்டு சென்று விநியோகம் செய்து

சிறப்பாகச் சென்றுகொண்டிருந்த இவர்களது உற்பத்திச் செயற்பாடு இலங்கையில் இடம்பெற்ற இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டது. இனக்கலவரத்தால் ஏற்பட்ட பாதைத்தடையால் இவர்களது உற்பத்தியும் வினியோகமும் விழ்ச்சியடைந்தது. இதனால் இக் கிராமத்து மக்கள் 1988ம் ஆண்டுடன் இத்தொழிலை கைவிட்டு வேறு தொழில்களில் ஈடுபடத்தொடங்கினர். இங்கு நடைபெற்ற தோற்பொருள் உற்பத்திகள் யாவும் முற்றாகத் தடைப்பட்டன.

போர் முடிவுற்ற நிலையிலே நம்முடைய மக்களின் பாரம்பரிய தொழிலான தோற்பொருள் உற்பத்தியை மீண்டும் தொடங்கவேண்டுமென வதிரி கூட்டுறவு சங்க நிர்வாகத்தினர் முடிவெடுத்தனர். நிர்வாகத்தினர் சிறு கைத்தொழில் அமைச்சுடன் தொடர்பு கொண்டு அவர்கள் மூலம் நிதியைப்பெற்றுக்கொண்டு குடிசைக்கைத்தொழிலாக இருந்த தோற்பொருள் உற்பத்தியை சிறுகைத்தொழில் பேட்டையாக ஒரு சிறிய தொழிற்சாலையாக உருவாக்கினர். இதுவே வதிரி தோற்பொருள் அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கமாக இயங்கி வருகின்றது.

இத் தொழிற்சாலையானது 2010ம் ஆண்டு அமைச்சின் உதவியுடன் பயிற்சி நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்டது. இதனால் ஆரம்பத்திலே இங்கு தரமான செருப்புக்கள் உற்பத்தி செய்யப்படவில்லை. பயிற்சி நிறுவனமாக இருந்ததால் அந்த உற்பத்திகள் மூலம் இலாபத்தினையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. 2011ம் ஆண்டிலே பயிற்சி நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு 6 தொழிலாளிகளுடன் தொழில் நிறுவனமாக தொடங்கப்பட்டது. ஆரம்பத்தில் இலாபம் சரியாகக் கிடைக்காமையினால் முதல் ஏழு மாதங்கள் அமைச்சினாலேயே தொழிலாளர்களுக்கும் முகாமையாளர்களுக்கும் சம்பளம் வழங்கப்பட்டது. ஏழு மாதங்களின் பின் உற்பத்தி மற்றும் விநியோகத்தில் ஏற்பட்ட வளர்ச்சியினால் தொழிற்சாலை வருமானத்திலிருந்தே சம்பளம் வழங்கப்படுகின்றது.

இத் தொழில் நிறுவனத்தினர் தமது தொழிற்சாலைக்குரிய தோற்பொருட்களை கொழும்பிலுள்ள எப். டி சி லெதர் சென்டர் செந்துஜன் லெதர் சென்டர் பி.கே. லெதர் சென்டர் முனுகி லெதர் சென்டர், நாராயணா லெதர் சென்டர் ஆகிய தோற்பொருள் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்கின்றனர். இங்கு பெண்களுக்குரிய, ஆண்களுக்குரிய செருப்புக்கள் மற்றும் சப்பாத்துக்கள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. இவர்கள் தமது விநியோகத்தை அதிகமாக வடமராட்சிப் பகுதியில் செய்து வருகின்றனர். தற்போது தமது விநியோகத்தை யாழ்ப்பாணம் முதல் வவுனியா வரை விஸ்தரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் வடமராட்சியிலுள்ள பாடசாலைகளுக்கும் சப்பாத்துகளை விநியோகித்து வருகின்றனர்.

இவர்கள் தங்களது தொழிற்சாலையை ஆறு தொழிலாளர்களுடன் ஆரம்பித்து இன்று ஒன்பது தொழிலாளர்களுடன் தமது நிறுவனத்தை நடத்தி வருகின்றனர். பல தடைகளைத் தாண்டி இவர்கள் வளர்ச்சியடைந்து வருகின்றனர். இந்நிறுவனத்தினரின் முயற்சியினால் முன்னைய ஆண்டுகளை விட 2014ம் ஆண்டிலே உற்பத்தி மற்றும் விற்பனை என்பன வளர்ச்சியடைந்து செல்வதை நாம் காணக்கூடியதாகவுள்ளது.